உ

சிவமயம்

பத்திரகாளி துணை



*சுழிபுரம்*

# ஸ்ரீ பத்திரகாளியம்மை திருப்பொன்னூஞ்சல்

ஆக்கியோன்

*அருட்கவி சீ. விநாசித்தம்பி*
(ஆசிரியர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்/ சுழிபுரம் ஸ்ரீ பத்திரகாளியம்மை

# திருப் பொன்னூஞ்சல்

### காப்பு

மதிபூத்த செஞ்சடையோன் வரையின் செல்வ
மகள்பூத்த பாங்குடையோன், மைந்தா, வேதத்
துதிபூத்த ஐங்கரனே தும்பி ராஜா
சுடர்பூத்த முகத்தோனே விக்கி னேசா
பதிபூத்த சுழிபுரம் பத்திரகா ளித்தாய்
பதம்பூத்த பொன்னூஞ்சல் பாட மேலாங்
கதிபூத்த கருணையெனும் கலை முதிர்ந்த
கனிபூத்த நின்கழலே காப்பதாமே.

### நூல்

சீரேறு மண்டங்கள் ஈன்ற தாயே
திருவேறு பராசக்தி யான தாயே
நீரேறு வலம்புரியாய் வந்த தாயே
நிலையேறு சைவநெறி தந்த தாயே
போரேறு சிங்கமிசை பொலியுறும் தாயே
புகழேறு செந்தமிழில் மலரும் தாயே
பாரேறு சுழிபுர மா பதியமர்ந்த
பத்திரகா ளித்தாயே ஆடீ ருஞ்சல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவிளங்கு நான்குமறை தூண்களாக
நலம்விளங்கு மாகமங்கள் நாண்க ளாக
பூவிளங்கு கலைகள்மணி மாட மாக,
பொருள்விளங்கு பிரணவமே பீடமாக,
ஆவிளங்கு மனுநூல்க ளாரமாக
அருள்விளங்கு பொன்னூஞ்ச லினிது மேவி
பாவிளங்கு சுழிபுரமா பதிய மர்ந்த
பத்திரகா ளித்தாயே ஆடீருஞ்சல்.

குணம் பெருகு மதிவதனம் நிலவெறிக்க
கொடை பெருகு கரவரிசை வரம்சுரக்க
கணம் பெருகு திருவடிகள் கருணை செய்ய
கதிர் பெருகு செஞ்சடைகள் மாரிபெய்ய
மணம் பெருகு மங்கலநாண் பண்புவீச
மலர் பெருகு திருத்தோழில் சுரும்புமூச
பணம் பெருகு சுழிபுரமா பதியமர்ந்த
பத்திரகா ளித்தாயே யாடீ ருஞ்சல்.

அடிசிறந்த பணியுறும் தொண்டர் கூட
அகம் சிறந்த வரம்பையர்க ளிசைகள் பாட
முடிசிறந்த இந்திராதி தேவர் சூழ
முறைசிறந்த திருநந்தி வேத மோத
துடிசிறந்த விடைவாணி யொடுசெய் யாளும்
சுகம்சிறந்த தோழிகளா யணிகள் தாங்க
படிசிறந்த சுழிபுரமா பதியமர்ந்த
பத்திரகா ளித்தாயே யாடீ ருஞ்சல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரியுடைய முகத்தோனும், ஞான மென்னும்
கழலுடைய வேலவனும், கனத்த யாக
எரியுடைய வீரபத் திரனும் மேக
எழிலுடைய திருமாலும் அயனும் வண்ண
வரியுடைய புலியுடைநா யகனும் வாழ்த்தி
மருவுடைய மலர்சொரிய வளம் சொரிந்து
பரிவுடைய சுழிபுரமா பதிய மர்ந்த
பத்திரகா ளித்தாயே யாட ரூஞ்சல்.

சித்திதரும் சிவயநம மந்திரத்துள்
செழுமைதரும் வகரமெனுஞ் செல்வியாகி
முத்திதரும் மூலசதா சிவமென்கின்ற
மூர்த்திதரும் ஆனந்த முடிவுமாகி
புத்திதரும் புண்ணியத்தின் விளைவுமாகி
பொலிவுதரும் காரணியே புனிதநெஞ்சப்
பத்திதரும் சுழிபுரமா பதியமர்ந்த
பத்திரகா ளித்தாயே யாட ரூஞ்சல்.

நாவலர்சூழ் சங்கத்தில் தமிழ் வளர்த்தாய்
நஞ்சினர்சூழ் அசுரகுலம் வேரறுத்தாய்
கோவலர்சூழ் மாயனுக்குத் தங்கை யாகி
குவலயம்சூழ் பிணிநீக்கிக் குளிர வைத்தாய்
காவலர்சூழ் மேருகிரி கடுகிப் போந்து
கடவுளர்சூழ் சிவன்மணந்த கன்னி யானாய்
பாவலப்சூழ் சுழிபுரமா பதி யமர்ந்த
பத்திரகா ளித்தாயே யாட ரூஞ்சல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணாட விநாயகனாம் விகட னாட
விடையாட மிளிர்கைலை விமல னாட
மண்ணாட மாமாயன் மலரோ னாட
மயிலாட வருமுருகன் ஆடக் கோடி
கண்ணாட கமாவீர நாத னாட
கதிராட மதியாடக் கனிந்த ஏழு
பண்ணாட சுழிபுரமா பதிய மர்ந்த
பத்திரகா ளித்தாயே யாடி ரூஞ்சல்.

சடையாட மணிமகுடம் சுட்டி யாட
தனமாடத் தழுவுசெவித் தோடு மாட
இடையாடக் கரமாட இனித்த பாத
இசையாட எழுநிறப்பட் டுடைக ளாட
தொடையாட மூக்கணியின் சோதி யாட
சொல்லாட வாயாட தொடரும் தேவப்
படையாட சுழிபுரமா பதிய மர்ந்த
பத்திரகா ளித்தாயே யாடி ரூஞ்சல்.

செல்லாண்ட மறைவிளக்கே யாடி ரூஞ்சல்
தொடையாண்ட கவிநயமே யாடி ரூஞ்சல்
வில்லாண்ட கரத்தாளே யாடி ரூஞ்சல்
வினையாண்ட பதத்தாளே யாடி ரூஞ்சல்
நெல்லாண்ட அறம்சொரிந்தாய் யாடி ரூஞ்சல்
நெறியாண்ட தவம்புரிந்தாய் யாடி ரூஞ்சல்
பல்லாண்டு சுழிபுரமா பதியமர்ந்த
பத்திரகா ளித்தாயே யாடி ரூஞ்சல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழி

தத்துவ வேதம் வாழி
தருமமும் பசுவும் வாழி
உத்தம சைவம் வாழி
உணர்த்திரு முறைகள் வாழி
சுத்தநெஞ் சடியார் வாழி
சுழிபுரப் பதியும் வாழி
பத்திர காளியம் மை
பதமலர் வாழி வாழி.

## எச்சரிக்கை

பொருளாரும் சிவசக்தி யேஎச்ச ரீக்கை
புவனாதி யதிகாரி யேஎச்ச ரீக்கை
மருளாரும் வினைபோக்கு வாய்எச்ச ரீக்கை
வருமைந்து தொழிலாக்கு வாய்எச்ச ரீக்கை
தெருளாரும் உயிர்மூல மேஎச்ச ரீக்கை
சிகராதி முதுகோல மேஎச்ச ரீக்கை
அருளாரும் சுழிபுரத் தாய்எச்ச ரீக்கை
ஆதிபத் திரகாளித் தாய்எச்ச ரீக்கை

## பராக்கு

மேதகு, சிவானந்த ரசமே பராக்கு
மெஞ்ஞான, மேறுபர வசமே பராக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதரமொ ராறுக்கும் சிரமே பராக்கு
ஐம்பத்தொன் றாகியவட் சரமே பராக்கு
பூதமெழு மாரம்ப கிரியே பராக்கு
புவனதனு போகமந் திரியே பராக்கு
வேதமுயர் சுழிபுரக்கண் ணம்மா பராக்கு
வீரபத் திரகாளி யாத்தாள் பராக்கு

**லாலி**

திரிநயனி நடராணி லாலி லாலி
சீவரட் சகி மாரி லாலி லாலி
அரிசோத ரிவராகி லாலி லாலி
அபிராமி உமைகௌரி லாலி லாலி
விரிகமல மலரழகி லாலி லாலி
விறன்மகிட சங்காரி லாலி லாலி
அரியசுழி புரவரசி லாலி லாலி
அன்னைபத் திரகாளி லாலி லாலி

**மங்களம்**

உயர்வுதரும் கணபதிக்கு மங்களம்
ஒண்கைலை ராஜனுக்கு மங்களம்
மயலறுக்கும் பார்வதிக்கு மங்களம்
மரகதம யூரனுக்கு மங்களம்
புயலனைய வண்ணனுக்கு மங்களம்
பொன்மகட்கும் நாமகட்கும் மங்களம்
பயிர்செழித்த சுழிபுரமா பதியமர்ந்த
பத்திரகா ளிச்செல்விக்கு மங்களம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ மாருதி வழக்கம்பரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org